# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 230/2019**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 4 |
| | Defence | | |
| | Court | | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தர்மராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2024.

(A7 died. A9 absent. Petition filed and allowed. Others present)

**<u>முதல் விசாரணை</u>**

நான் வருவாய்த்துறையில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து 31.05.2024 ஆம் தேதி பணி ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 2016 ஆம் வருடம் நான் ஊத்துமலை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது, ஊத்துமலை காவல் ஆய்வாளர் என்னை அழைத்து, ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், அதுவிஷயமாக என்னை காவல்நிலையத்திற்கு வரசொன்னார். நானும் கிராம உதவியாளர் மகாலெட்சுமியும் காவல்நிலையம் சென்றோம். அப்போது

காலை 10.00 மணி இருக்கும். அப்போது காவல் ஆய்வாளர் அங்கு இருந்தார். தெய்வசுந்தர பாண்டியன் (எ) தெய்வம் அங்கு இருந்தார். கொலை வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தபோது, தெய்வசுந்தரபாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவுசெய்தார், அப்போது நான் உடன் இருந்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பண பரிவர்த்தனை சம்பந்தமான தகராறில் தனக்கும் நல்லமலை என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு, நல்லமலையுடன் இருந்த ஜெகதீஷ் என்ற நபரை அரிவாளால் வெட்டி கொலை செய்துவிட்டதாக குறிப்பிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **தெய்வசுந்தரபாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 1** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் Ford Fiesta காரை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து ஒருதோட்டத்திலிருந்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 2** ஆகும். அந்த **காரின் புகைப்படம் சா.பொ.1** ஆகும்.

பின்னர், அதே மாதம் வேறு வேறு தேதிகளில் இவ்வழக்கின் மற்ற எதிரிகள் 7 பேரிடம் ஆய்வாளர் விசாரணை செய்து, அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தார். அப்போதும் நான் உடன் இருந்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். **எதிரி கணபதிதேவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3** ஆகும். எதிரி கணபதிதேவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஊத்துமலை அடிவாரத்தில் ஒரு பாலத்தின் அருகிலிருந்து கைப்பற்றப்பட்ட அரிவாளை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 4** ஆகும். அந்த **அரிவாள் சா.பொ.2** ஆகும்.

சுரண்டையை சேர்ந்த **எதிரி மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 5** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கணபதி தேவரின் தோட்டத்திலிருந்து டவேரா காரை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.6** ஆகும். அந்த **டவேரா காரின் புகைப்படம் சா.பொ.3** ஆகும்.

**எதிரி சபரிசெல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 7** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கணபதி தேவரின் தோட்டத்திலிருந்து ஒரு கத்தியை அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.8** ஆகும். அந்த **கத்தி சா.பொ. 4** ஆகும்.

மற்றொரு எதிரியான திருநெல்வேலி **டவுனை சேர்ந்த மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 9** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது தோட்டத்திலிருந்து இண்டிகோ காரை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 10** ஆகும். அந்த **இண்டிகோ காரின் புகைப்படம் சா.பொ. 5** ஆகும்.

**எதிரி வெள்ளைத்துரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 11** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கணபதி தேவரின் தோட்டத்திலிருந்து மற்றொரு அரிவாளை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 12** ஆகும். அந்த **அரிவாள் சா.பொ. 6** ஆகும்.

**எதிரி விஷ்ணு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 13** ஆகும். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு செல்போன் கைப்பற்றப்பட்டது. அதை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.14** ஆகும். அந்த **செல்போன் சா.பொ. 7** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மருதப்பப்புரம் இசக்கிதுரை என்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இசக்கிதுரைக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தட்டாம்பாறையை சேர்ந்த மாடசாமி என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருநெல்வேலி டவுனை சேர்ந்த ஸ்ரீரங்கம் என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தட்டாம்பாறை பிள்ளையார் கோவிலை சேர்ந்த மாடசாமித்தேவர் என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுரண்டை சாமித்துரை

என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுரண்டை மணிகண்டன் என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுரண்டையை சேர்ந்த சங்கரபாண்டியன் என்ற நபர் யார், அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் வாரிசுகளை வைத்துக்கொண்டு போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் முதன்முதலாக இந்த வழக்கு விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு சென்றபோது, நான் முதல்விசாரணையில் சொன்ன சான்றுபொருட்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் ஆய்வாளர் பாதுகாப்பில் இருந்தது என்றால் சரிதான். அந்த சான்று பொருட்களை நான் சரி பார்த்தபின்பு தான் அத்தாட்சிகளில் கையெழுத்துப்போட்டேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புலன்விசாரணை அதிகாரி, விசாரணை செய்த நபர்களிடம் நான் யார் என்பதை அறிமுகம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். நான் என்ன நோக்கத்திற்காக காவல் நிலையம் வந்துள்ளேன் என்ற விவரம் மேற்படி நபர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பு, நான் பார்த்ததாக சொல்லும் நபர்கள் எவ்வளவு நேரம் ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பு, அந்த நபர்கள் ஆய்வாளரிடம் என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 230/2019**

Depositions of Witness for Prosecution Pw 5
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மகாலெட்சுமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2024.

(A7 died. A9 absent. Petition filed and allowed. Others present)

<u>**முதல் விசாரணை**</u>

நான் ஊத்துமலை கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2016 ஆம் தேதி காலையில் 11.00 மணியளவில் நான் ஊத்துமலை கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது, ஊத்துமலை காவல் ஆய்வாளர் என்னை அழைத்து, ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், அதுவிஷயமாக என்னை காவல்நிலையத்திற்கு வரசொன்னார். நானும் கிராம நிர்வாக அலுவலர் தர்மராஜீம் காவல்நிலையம் சென்றோம். அப்போது

காவல்நிலையத்தில் தெய்வசுந்தரபாண்டியன் இருந்தார். தெய்வசுந்தரபாண்டியன் ஆய்வாளரிடம் என்ன சொன்னார் என்ற விவரம் எனக்கு நினைவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்துஎன்னுடையது தான். ஜெகதீசன் என்பவருடைய கொலை வழக்கு தொடர்பாக போலீசார் தயார் செய்த ஆவணங்களில் நான் மேற்படி கையெழுத்து செய்தேன். மேற்படி **ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 15 – 21** ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சிகளில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்தும் என்னுடையது தான். அந்த **அத்தாட்சிகளில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 22 – 29** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல்நிலையத்திற்கு சென்றதாகவும், அங்கு எதிரி தெய்வசுந்தர பாண்டியனை பார்த்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எங்கள் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வைத்து காவல் ஆய்வாளர் எங்களிடம் மேற்படி கையொப்பத்தை பெற்றார் என்றால் சரியல்ல. நாங்கள் தயார் செய்துவைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல,நாங்கள் சென்ற பிறகு தான் போலீசார் மேற்படி ஆவணங்களை தயார் செய்தார்கள். அதில் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்துசெய்ததால் நானும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi